செ. கு. எண்: 092 நாள் :30.09.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 30.9.2015

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் இளநிலை பொறியாளராகப் பணி புரிந்து வந்த திரு. சேஷாத்திரி என்பவர் 22.9.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், மஞ்சம்பாக்கம் கிராமத்திலுள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான கனரக வாகனங்கள் நிறுத்தும் இடத்தினை ஆய்வு செய்து கொண்டிருந்த போது அவசர நுழைவு வாயிலின் இரும்பு கதவு திடீரென சாய்ந்து விழுந்ததில், பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. சேஷாத்திரியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. சேஷாத்திரியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**